செ.வெ.எண்: 09/ஆகஸ்ட் நாள்: 05.08.2017

# இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம், அரிச்சல்முனை கடற்கரை பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் சுற்றுப்புறத்தை துாய்மையாக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம், அரிச்சல்முனை கடற்கரையில் இன்று (05.08.2017) திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் சுற்றுப்புறத்தை துாய்மையாக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் மொத்தம் 8 வட்டாட்சியர் அலுவலகங்களும்,11 வட்டார வளர்ச்சி அலுவலகங்களும், 7 பேரூராட்சிகளும், 429 கிராம ஊராட்சிகளும் உள்ளன.பொதுமக்கள் தாங்கள் வசிக்கும் இடத்தையும், தங்களை சுற்றியுள்ள இடத்தையும் பாதுகாப்பாகவும் சுகாதாரமாகவும் வைத்துக்கொள்ளும் பொருட்டு பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்திடும் விதமாக மாவட்ட நிர்வாகத்தின் மூலமாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பொதுமக்கள் சுற்றுப்புறத்தை துாய்மையாக வைத்துக்கொள்வதன் மூலம் பல்வேறு நோய்களில் இருந்து தங்களைக் காத்துக்கொள்ள முடியும். பொதுமக்களிடையே சுற்றுப்புற துாய்மை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடும் விதமாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.இராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் சுகாதாரத்தை மேம்படுத்திடும் விதமாக மாவட்ட நிர்வாகம் மூலம் சுற்றுப்புற துாய்மை பணிகள் மேற்கொள்ள உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இராமேஸ்வரம் இராமநாதசுவாமி திருக்கோயில்,மறைந்த முன்னாள் குடியரசுத்தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல்கலாம் அவர்களின் பிறப்பிடம் மற்றும் தேசிய நினைவகம் ஆகியவை போன்று பல பெருமைகளை உள்ளடக்கியது நமது இராமேஸ்வரம் நகரமாகும்.இத்தகைய சிறப்புமிக்க சுற்றுலாத்தலமான நமது மாவட்டத்தை சுகாதாரமான முறையில் பேணிக்காத்திட ஒவ்வொருவரும் முனைப்புடன் செயலாற்றிட வேண்டும் .

மேலும் சுற்றுலாப்பயணிகள் அதிக அளவில் வருகைதரும் விதமாக முகுந்தராயர் சத்திரம் முதல் அரிச்சல்முனை இணைப்பு சாலை கடந்த 27.07.2017 அன்று துவக்கிவைக்கப்பட்டது.

அதனடிப்படையில் முதற்கட்டமாக இன்றையதினம் (5.8.2017) இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் அரிச்சல்முனை பகுதியில் திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்தின் கீழ் இப்பணிகள் துவங்கப்பட்டுள்ளது. சுற்றுப்புறத்தை துாய்மையாக வைத்துக்கொள்வது தொடர்பாக இராமேஸ்வரம் நகராட்சி நிர்வாகம் , தன்னார்வ தொண்டு நிறுவனமான ஹேண்ட் இன் ஹேண்ட் இந்தியா நிறுவன பணியாளர்கள், இராமநாதபுரம் செய்யது அம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லுாரி,இராமேஸ்வரம் அரசு மேல்நிலைப்பள்ளி,வேர்க்கோடு சென்ட் ஜோசப் மேல்நிலைப்பள்ளிகளை சார்ந்த மாணவ மாணவியர்கள் சார்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும், திடக்கழிவு மேலான்மை திட்டத்தின் கீழ் துாய்மைப்படுத்தும் பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு இராமேஸ்வரத்தினை சுற்றுப்புற துாய்மையில் தன்னிறைவு பெற்ற சுற்றுலாத்தலமாக ஏற்படுத்திடும் வகையில் பணியாற்றிட வேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி பேபி, பசுமை இராமேஸ்வரம் ஒருங்கினைப்பாளர் திருமதி.சரஸ்வதி உட்பட அரசு அலுவலர்கள்,பள்ளி ஆசிரியர்கள்,கல்லுாரி பேராசிரியர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**